Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 120

திங்கட்கிழமை
25 மார்ச் 2024

பங்குனி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"பலநாள்
கள்ளர் ஒருநாள்
பிடிபடத்தானே
வேணும்
கண்டியளோ"

வடக்கில் கடந்த ஆண்டு

# கொள்ளை மற்றும் களவால் 1,054 கோடி ரூபா பறிகொடுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டு இடம் பெற்ற கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களால் ஆயிரத்து 54 கோடி ரூபா, மக்களால் பறிகொடுக்கப்பட்டுள்ளது. கொள்ளைச் சம்பவங்களில் ஆயிரத்து 12 கோடி ரூபாவும் திருட்டுச் சம்பவங்களால் 42 கோடி ரூபாவும் இழக்கப்பட்டுள்ளன.

11

## விலை

### பால்மா குறைப்பு

கொழும்பு, மார்ச் 25

நேற்று நள்ளிரவு முதல் இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் ஒரு

11

### தேங்காய் உயர்வு

கொழும்பு, மார்ச் 25

எதிர்வரும் மாதங்களில் தேங்காய் ஒன்று 200 அல்லது 300 ரூபாவுக்கு விற்பனை செய்யும் நிலை ஏற்படக்கூடும் என்று தென்னை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

11

## சுயாட்சியை அடைய இந்திய மேற்பார்வை

ரெலோவின் மாநாட்டில் தீர்மானம்

வவுனியா, மார்ச் 25

தமிழர்களின் நீண்டகால அரசியல் அபிலாஷைகளான வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில், தம்மைத்தாமே ஆளுகின்ற, சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக்கூடிய, சுயாட்சி அரசியல் கட்டமைப்பை உருவாக்குவதற்கான தொடர்ச்சியான அரசியல் வேலைத்திட்டத்தை

11

## ஊடகவியலாளர் எனக் கூறி மோசடியில் ஈடுபட்டவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 25

கனடாவுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து பணமோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஊடகவியலாளர் எனத் தன்னை அடையாளப்படுத்திய நபர் ஒருவர் வவுனியாவில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் கனடாவுக்குச் செல்வதற்காக வவுனியாவிலுள்ள மேற்படி நபரை அணுகியுள்ளார். கனடாவில் 'சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்வு நடைபெறவுள்ளது. இலங்கையிலிருந்து சில ஊடகவியலாளர்கள் அங்கு செல்கின்றனர். ஊடகவியலாளர் என்ற போர்வையில் உங்களையும் கனடா அனுப்புகிறேன்' என்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபருக்கு ஆசைகாட்டி, 43 இலட்சம்

11

கொழும்பில்

## ஆடையகத்தில் பெரும் தீ விபத்து

கொழும்பு, மார்ச் 25

வெள்ளவத்தையில் உள்ள பிரபல ஆடை வர்த்தக நிறுவனமான நோலிமிட் கட்டடத்தில் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. நேற்று மாலை தீவிபத்து ஏற்பட்டதை அடுத்து, தீயணைப்புப் பணிகளில் பத்துக்கும் அதிகமான தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. நேற்றுமுன்னிரவே தீ முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (அ-ஒ-இ)

### விபத்தில் சிக்கியவர் உயிரிழப்பு

விரிவு - பக். - 11

## கோத்தாபய பதவி விலக தமிழர்கள் காரணமல்லர்

கூறுகிறார் பஸில்



கொழும்பு, மார்ச் 25

கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதிப் பதவியில் இருந்து விரட்டியது தமிழ் - முஸ்லிம் மக்கள் தான் என்பதை ஏற்கமுடியாது என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி வேட்பாளருக்குத் தகுதியானவர் ரணில் விக்கிரமசிங்கதான். பொருளாதார ரீதியில் வீழ்ச்சிப் பாதையில் சென்ற இந்த நாட்டை அவர் மீட்டெடுத்திருக்கிறார். அனைத்துப் பிரச்சினைகளும் மெல்லத் தீர்ந்துகொண்டு வருகின்றன. முதலில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு. இதை நான் ஜனாதிபதி ரணிலிடம் கூறியிருக்கின்றேன் - என்றார். (அ-ஒ-இ)

## கடற்படையினருக்கு தடுப்புக்காவல்

யாழ்ப்பாணம், மார்ச் 25


ஊர்காவற்றுறை பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட கடற்படைப் புலனாய்வாளர்கள் இருவர் உள்ளிட்ட மூவரையும் 48 மணித்தியாலங்கள் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் சரோஜினி இளங்கோவன் அனுமதி வழங்கியுள்ளார். (அ-ஒ-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா, சீனாவுக்கு இலங்கைக் குழுக்கள்!

## பல்வேறு சந்திப்புகளில் பங்கேற்பு



**இலங்கையில் தேர்தல் தொடர்பான பரபரப்புத் தொற்றியுள்ள நிலையில், அரசாங்கத்தின் உயர் மட்ட இரு குழுக்கள் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளன.**

பிரதான எதிர்க்கட்சிகள் இந்தியா உட்பட வெளிநாடுகளுடன் சந்திப்புகளை மேற்கொண்டுவரும் நிலையில், அரச தரப்புப் பிரதானிகள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்கின்றனர்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான குழு பீஜிங்குக்கும், ஜனாதிபதி பணியாட்தொகுதி பிரதானி சாகல ரத்நாயக்க தலைமையிலான குழு டில்லிக்கும் செல்லவுள்ளது.

பிரதமருடன் அவரின் செயலாளர் அநுர திஸாநாயக்க, நிதி இராஜாங்க அமைச்சர் செயான் சேமசிங்க ஆகியோர் 25 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதிவரை சீனாவில் இருப்பார்கள். சீன ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்ட பிரமுகர்களுடன் இவர்கள் பேச்சு நடத்தவுள்ளனர்.

இந்தியா செல்லும் குழு அங்கு பல சந்திப்புகளை நடத்தவுள்ள நிலையில், இரு நாடுகளுக்கு இடையிலான நில இணைப்புத் தொடர்பாகவும் ஆராயும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தென்னிலங்கையில் இந்தியாவுடனான எட்கா உடன்படிக்கை தொடர்பாகக் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ள நிலையிலும், தேர்தல் பரபரப்புத் தொற்றியுள்ள நிலையிலும் இந்தப் பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றமை அரசியலில் அவதானிப்பைப் பெற்றுள்ளது. (எ-44)

## காலநிலை மாற்றங்கள் இலங்கையைத் தாக்கும்!

கொழும்பு, மார்ச் 25

உலகளாவிய ரீதியில் காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்படும் பத்து நாடுகளில் இலங்கையும் உள்வாங்கப்பட்டுள்ளது.

இலங்கை காலநிலை நாடாளுமன்றத்தின் தலைவர் எரான் விக்கிரமரத்ன மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜேவர்த்தன ஆகியோர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

2050 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் காலநிலை மாற்றம் ஒரு சதவீத இழப்பை ஏற்படுத்தும். காலநிலை மாற்றத்தால் இலங்கையின் விவசாயத்துறை பில்லியன் கணக்கான டொலரை இழக்கநேரிடும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)

## முரண்டுபிடித்தால் வேட்புமனு இல்லை

### பெரமுன யோசனை

கொழும்பு, மார்ச் 25

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தீர்மானத்துக்கு முரணாகச் செயற்படும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களுக்கு அடுத்த தேர்தலின்போது போட்டியிடுவதற்கு வேட்புமனு வழங்கக்கூடாது எனக் கட்சி தலைமைப்பீடத்திடம் மூத்த உறுப்பினர்கள் சிலர் யோசனை முன்வைத்துள்ளனர்.

12 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் இந்த யோசனை கையளிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியில் இருந்து அமைச்சரவையில் இடம்பெற்று, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சார்பாக கருத்துகளை வெளியிட்டுவரும் அரசியல்வாதிகளை இலக்குவைத்தே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (எ-44)

## உயிராபத்து இல்லையேல் உண்மையைச் சொல்வேன்!

### மைத்திரி சரவெடி



கொழும்பு, மார்ச் 25

எனது உயிருக்கு உத்தரவாதம் தந்தால் உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலுக்குக் காரணமானவர்கள் குறித்து அறிவிப்பேன் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தின தாக்குதலை நடத்தியது யார் என்பது தனக்குத் தெரியும் என்றும் அது தொடர்பில் நீதித்துறைக்குத் தகவல்களை வெளியிடத் தயார் என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் தனக்கும் தன் குடும்பத்துக்கும் உயிர் அச்சுறுத்தல் இருக்கிறது என்றும் எமக்குப் பாதுகாப்பு வழங்கும் பட்சத்தில் உயிர்த்த ஞாயிறுத் தினத் தாக்குதல்கள் தொடர்பில் உண்மைகளை வெளியிடுவேன் என்றும் மைத்திரிபால சிறிசேன மீண்டும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## விபத்து இழப்பீடுகளை விரைவாக்கும் திட்டம்!

கொழும்பு, மார்ச் 25

வீதி விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிமன்ற நடவடிக்கைகளின்றி உடனடியாக இழப்பீடு வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விபத்து இடம்பெற்று ஒரு வருடத்துக்குள் சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனத்துக்கு விண்ணப்பிப்பதன் மூலம் 5 இலட்சம் ரூபா வரையான இழப்பீட்டுத் தொகையைப் பெறலாம். நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள காப்புறுதி நிறுவனத்தின் எந்தவொரு கிளையிலும் அந்தத் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-26)

## டாக்காவுக்கு விமானசேவை

கொழும்பு, மார்ச் 25

கொழும்பு மற்றும் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவுக்கு இடையே அடுத்த மாதம் முதல் நேரடி விமான சேவை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்த விமான சேவை எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆரம்ப கட்டணம் 74 ஆயிரத்து 600 ரூபாவாக அறிவிப்படவுள்ளது. (ச-இ)

## சீனி விலை 'கிடு கிடு'

கொழும்பு, மார்ச் 25

புறக்கோட்டை மொத்த சந்தையில் ஒரு கிலோகிராம் வெள்ளைச் சீனியின் மொத்த விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் 255 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் வெள்ளைச் சீனியின் மொத்த விற்பனை விலை தற்போது 275 ரூபாவிலிருந்து 280 ரூபா வரை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அண்மைய நாள்களில் சுங்க அதிகாரிகள் முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கையின் தாக்கத்தால் சீனியின் விலை அதிகரித்துள்ளது என தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். (ச-இ)

## மைத்திரியிடம் வாக்குமூலம்!

கொழும்பு, மார்ச் 25

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள கருத்துத் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இன்று வாக்குமூலம் பதிவு செய்யவுள்ளனர் என்று பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை நடத்தியது யார் எனத் தனக்குத் தெரியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வெள்ளிக்கிழமை கருத்துத் தெரிவித்திருந்தார். அதையடுத்து மைத்திரிபால சிறிசேனவிடம் விசாரணை நடத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நேற்றுமுன்தினம் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டிருந்தார். (எ-44)

## ஈஸ்டர் தாக்குதலுக்கு மைத்திரி ஒத்துழைப்பு?

### பிள்ளையானுக்குச் சந்தேகம்

கொழும்பு, மார்ச் 25

ஈஸ்டர் குண்டுவெடிப்பு இடம்பெறுகின்றபோது மைத்திரிபால சிறிசேன நாட்டின் தலைவராக இருந்துள்ளார். தலைவருடைய பொறுப்பை விட்டுவிட்டு இப்போது இரகசிய வாக்குமூலம் கொடுக்கவேண்டும் என்று கூறுவது மூடத்தமானது.

- இவ்வாறு பிள்ளையான் என்றழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு சாதாரண மனிதனைப்போலப் பேசுகின்றார். அப்போது தலைவருடைய பொறுப்பை விட்டுவிட்டு இப்போது ஈஸ்டர் தாக்குதல் நடத்தியவர்களைத் தெரியும், இரகசிய வாக்குமூலம் கொடுப்பேன் என்கிறார். அவர் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருக்கின்றாரா? என்ற சந்தேகமே இதனூடாக எழுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## 2 கோடி ரூபா பெறுமதியான ஐஸுடன் இருவர் கைது

கொழும்பு, மார்ச் 25

சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முச்சக்கரவண்டியில் ஐஸ் போதைப் பொருளைக் கொண்டு சென்றபோதே கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரின் சோதனையில் இந்தக் கைது இடம்பெற்றது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை – இந்தியப் பாலம் பேச்சு நடத்த சாகல பயணம்

கொழும்பு, மார்ச் 25

**தேசியப் பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி செயலகத்தின் பிரதானியுமான சாகல ரத்நாயக்க இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.**

இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் வகையில் கடலுக்குமேல் மேம்பாலம் அமைப்பது குறித்து இந்தப் பயணத்தின்போது அவர் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சு நடத்தவுள்ளார்.

இலங்கையின் தலைமன்னார் பகுதியிலிருந்து இந்தியாவின் இராமேஸ்வரம் வரை மேம்பாலத்தை அமைக்கவும் , போக்குவரத்து நெரிசலைத் தடுப்பதற்காகத் தொடருந்து சேவையையும் அறிமுகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் 27 ஆம் மற்றும் 28 ஆம் திகதிகளில் சாகல ரத்நாயக்க, குறித்த விடயம் தொடர்பான பேச்சை சம்பந்தப்பட்ட தரப்பினருடன் முன்னெடுக்கவுள்ளார் என்றும் அரச வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

## காசநோய் தீவிரம்

கொழும்பு, மார்ச் 25

நாட்டில் வேகமாக காசநோய் பரவிவருகின்றது. கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் அதிகளவானோர் அடையாளம் காணப்படுகின்றனர் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி மருத்துவர் ஆர்.எம்.எம். சரத் பண்டார தெரிவிக்கையில்: உமிழ்நீர், சளி மூலமாக பரவக்கூடிய இந்த நோய் தற்போது வேகமாக பரவிவருகிறது. கொழும்பு , கம்பஹா மற்றும் களுத்துறை உள்ளிட்ட மாவட்டங்களிலேயே அதிகளவான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 2 வாரங்களுக்கு மேல் தொடரும் இருமல், சளியுடன் இரத்தம் வெளியேறுதல் உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டால் மருத்துவரை நாடி பரிசோதனை மேற்கொள்வது அவசியம் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

## ஊழியருக்கு மேலதிகக் கொடுப்பனவு முதலீட்டுச்சபை ரூ.61 கோடி செலவு

2022ஆம் ஆண்டில்திறைசேரியின் அனுமதியின்றி ஊழியர்களின் மேலதிகக் கொடுப்பனவுகளுக்காக இலங்கை முதலீட்டுச் சபை சுமார் 61 கோடி ரூபாவைச் செலவிட்டுள்ளது.

தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. ஊழியர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவு உள்ளிட்ட பல்வேறு கொடுப்பனவுகளை வழங்குவதற்கு இந்தத் தொகை செலவிடப்பட்டுள்ளது.

மேலதிக கொடுப்பனவுகளுக்காக சுமார் 7 கோடி ரூபாவும், ஏனைய கொடுப்பனவுகளுக்காக 54 கோடி ரூபாவுக்கும் அதிகமாகவும் செலவிடப்பட்டுள்ளது என்றும் கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கண்டுபிடிக்கப்படாத 4,000 காசநோயாளர்!



இலங்கையில் சுமார் 4 ஆயிரம் காசநோயாளர்கள் அவதானிக்கப்படாமல் இருக்கின்றனர் என்று வவுனியா காசநோய் கட்டுப்பாட்டு மருத்துவ அதிகாரி கே.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- இலங்கையில் பலர் உயிரிழப்பதற்குக் காரணமான நோயாக காசநோய் காணப்படுகின்றது. கடந்த வருடம் வவுனியாவில் 58 காசநோயாளர்கள் அவதானிக்கப்பட்டனர். அவர்களில் மூவர் உயிரிழந்தனர். காசநோய் ஏற்பட்டால் ஆறுமாதத்துக்கு நேரடி சிகிச்சையைப் பெறுவதன் மூலம் அவர் அந்த நோயில் இருந்து குணமடையலாம். சிகிச்சைகளை எடுக்கத் தவறினால் நோய் தீவிரமடைந்து இறப்புக்கு வழிவகுக்கும் - என்றார் (ம-110)

## கொக்கேய்ன் போதையுடன் வெளிநாட்டவர் கைது

கொழும்பு, மார்ச் 25

நாட்டுக்குள் சட்டவிரோதமாக 12 கொக்கேய்ன் போதை மாத்திரைகளைக்கொண்டு வந்த வெனிசுலா பிரஜை ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர். கைப்பற்றப்பட்ட கொக்கேய்ன் போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர்பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரிடம் [illegible] ளார். (ச-இ)

## காலை உணவுத் திட்டம் இன்றுமுதல் ஆரம்பம்



பாடசாலை மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் வேலைத்திட்டம் இன்றுமுதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டிலுள்ள 17 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்காக இந்த வேலைத்திட்டம் முன்னிலைப்படுத்தப்படவுள்ளது. இந்த வேலைத்திட்டத்துக்காக 26பில்லியன் ரூபா [illegible]டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## புதினம் தெரியுமோ?

**பா**த்திரமறிஞ்சு பிச்சையிடு எண்டு முந்தின ஆக்கள் சொல்லுறது இப்பவும் பொருத்தமாத்தான் இருக்குது. நாலைஞ்சு நாளுக்கு முதல் யாழ்ப்பாணத்தில மூண்டு சந்தியளில ஒவ்வொரு சின்னப்பிள்ளையள் நிண்டுகொண்டு போறவாற ஆக்களிட்ட பிச்சை கேட்டிருக்கினம். பத்தியெரியிற இந்த வெயிலுக்குள்ள பச்சைப்பிள்ளையள் பிச்சை கேட்டால் எல்லாருக்கும் இரக்கம் வரும்தானே. அதால அந்தச் சந்தியால போறவாறவையெல்லாம் பார்த்துப் பாராமல் அந்தப் பிள்ளைய்களுக்குக் காசைப் போட்டிட்டு போயிருக்கினம். ஆனால் ஆரோ ஒரு புண்ணியவான் 'சின்னப்பிள்ளையளை வைச்சு பிச்சை எடுக்கினம்' எண்டு பொலிஸுக்குப் போட்டுக்குடுக்க, அந்தப்பிள்ளையளை அப்பிடியே அள்ளிக்கொண்டுபோய் விசாரிச்சிருக்கு பொலிஸ்.

அந்தப்பிள்ளையள் தனிய வரேலை. அவையின்ர தாய் தகப்பனோட தான் வந்திருக்கினம். அவை எங்க நிக்கினம் எண்டு பொலிஸ் தேடினால், அவையும் வேற சந்தியளில பிச்சை எடுத்துக் கொண்டு நிண்டிருக்கினம். அவையையும் அலேக்கா தூக்கிக்கொண்டு வந்து பொலிஸ் விசாரிச்சிருக்கு.

'இப்பிடி சின்னப்பிள்ளையளை வைச்சு பிச்சை எடுக்கிறது குற்றம். ஏன் அப்பிடி செய்தனீங்கள்? எண்டு பொலிஸ் உறுக்கி கேக்க, அவை சொன்ன பதிலைக் கேட்டு பொலிஸுக்கு அழுகிறதா, சிரிக்கிறதா எண்டு தெரியாமல் போட்டுதாம்.

ஐயா! நாங்கள் வத்தளையில இருக்கிறம். அங்க சொந்தமா வீடு கட்டிக் கொண்டிருக்கிறம். அதுக்குத் தான் இப்பிடிக் குடும்பத்தோட வந்து பிச்சை எடுக்கிறம்.

எடுத்து எப்பிடி வீடு கட்டமுடியும்? ஆரைப் பேய்க்காட்ட பாக்கிறியள்? எண்டு இன்னும் பொலிஸ்காரர் அதட்டியிருக்கினம்.

சத்தியமா உண்மை. இஞ்ச எங்கட செலவுகள் எல்லாம் விட்டு ஒருநாளைக்கு முப்பதாயிரம் ரூபாவுக்கு கிட்டத் தேறும். பத்துப் பதினைஞ்சு நாள் இஞ்ச பிச்சை எடுத்திட்டு, அந்தக் காசைக் கொண்டு போய் வீடுகட்டுற வேலையைப் பாப்பம்.பிறகு காசு முடிய இஞ்ச வருவம். யாழ்ப்பாணத்தில மட்டுமில்ல, ஒவ்வொருமுறையும் ஒவ்வொரு இடம்போவம். ஆக்கள்கூட நடமாடுற இடங்களில் நிண்டாத்தான் காசு நிறையக் கிடைக்கும் எண்டு அவை சொன்ன தகவலை வைச்சுக் கொண்டு, வத்தளைப் பொலிஸுக்கும் அடிச்சுக் கேட்டால், இவை சொன்ன இடத்தில அப்பிடி ஒரு வீடு கட்டுப்பட்டுக் கொண்டிருக்கிறது உண்மைதான் எண்டு உறுதியாகிட்டுதாம்.

இஞ்ச அரசாங்கவேலையுள்ளவையே 'லோன்' எடுத்தும் வீடு கட்ட ஏலாமல் முக்கித் தக்கேக்க எங்கேயோ இருந்து இஞ்ச வந்து பிச்சை எடுத்த காசில கொழும்பில வீடு கட்டுகினம் எண்டாப் பாருங்கோவன். அதைவிட இந்தப் பிச்சையெடுக்க வந்த குடும்பம் எங்க தங்கியிருந்தவை எண்டு பொலிஸ் நோண்டினா அதிலையும் பெரும் அதிர்ச்சியாம்.

யாழ்ப்பாணத்தில உள்ள பெரிய ஹொட்டல் ஒண்டில தான் அவையள் ரூம் எடுத்து நிண்டிருக்கினமாம். இந்தக் ஹொட்டல் செலவு போகத்தான் அவைக்கு ஒவ்வொருநாளும் முப்பதாயிரம் கையில மிஞ்சியிருக்கெண்டால், கிட்டத்தட்ட 50 ஆயிரம் மட்டில பிச்சை எடுத்திருக்கினம். ஹொட்டலில ரூம் போட்டு நிண்டு பிச்சை எடுக்கிற அளவுக்கு இலங்கையின்ர பொருளாதாரமும் வாழ்க்கைத்தரமும் முன்னேறியிருக்கு கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** நாள் முழுவதும் சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் அன்பும் மகிழ்ச்சியும் நிறைந்த சூழ்நிலை காணப்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். செலவு செய்யநேரிடும். சிவபெருமானை வழிபடுவது நன்று.

**இடபம்:** புதிய முயற்சிகளை மேற்கொள்ளும்போது கூடுதல் கவனம் தேவை. செயல்கள் அனைத்திலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

**மிதுனம்:** மனதில் தேவையற்ற வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சங்கடங்கள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வெளியில் செல்லும்போது கூடுதல் எச்சரிக்கை தேவை. விநாயகரை வழிபட தடைகள் விலகும்.

**கடகம்:** தொடங்கும் முயற்சிகள் நன்மையாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். அன்பும் மகிழ்ச்சியும் நிலவும். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். மனவருத்தம் நீங்கும். நன்மைகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** செயல்கள் அனைத்திலும் வெற்றியே ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்புண்டு. பிணக்குகள் நீங்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்ளும்போது ஒருமுறைக்குப் பலமுறை சிந்தித்துச் செயற்படுவது நல்லது. எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், குடும்பம் முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். எதிர்பாராத ஆதாயங்களுக்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைப்பது மகிழ்ச்சி தரும்.

**விருச்சிகம்:** மனதில் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். உற்சாகமாகச் செயற்படுவீர்கள். ஆதாயம் உண்டாகும். உடல் நலனில் கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகளில் நன்கு சிந்தித்து ஈடுபடவும்.

**தனுசு:** மகிழ்ச்சியும் உற்சாகமும் நிறைந்திருக்கும் நல்ல நாள். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். உற்சாகமாகச் செயற்படுவீர்கள். விநாயகரை வழிபட காரியங்கள் சாதகமாக முடியும்.

**மகரம்:** தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். பிடிவாதப் போக்கு சற்றுக் கவலை தரும். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. வியாபாரத்தில் இலாபம் உண்டாகும். சிரமங்கள் குறையும்.

**கும்பம்:** நினைத்த காரியத்தை முடிப்பதில் சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படக்கூடும். குடும்பத்திலும் சின்னச்சின்ன சச்சரவுகள் வந்து நீங்கும். ஆறுதல் கிடைக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். செயல்கள் வெற்றிகரமாக நிறைவேறும். காரியம் அனுகூலமாக முடியக்கூடும். ஆதாயம் கிடைக்கும். வைரவர் வழிபாடு நலம் சேர்க்கும். நன்மைகள் அதிகரிக்கும்.

# வெளிநாட்டிலிருந்து பணம்; யாழ்ப்பாணத்துக்குப் பிரச்சினை

## இப்படிச் சொல்கிறார் ரவி கருணாநாயக்க



**யாழ்ப்பாணம், மார்ச் 25**

**இங்கு உள்ளவர்களில் பெரும்பாலானோரின் உறவினர்கள் வெளிநாடுகளில் உள்ளனர். சுமார் 40 முதல் 45 சதவீதமானோரின் குடும்பங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து பணம் வருகின்றது. அந்தப் பணமானது புகைத்தல் அல்லது மதுபானம் போன்ற அவசியமற்ற செயற்பாடுகளுக்காகச் செலவிடப்படுகின்றது. அந்தப் பணத்தை எவ்வாறு சரியானமுறையில் செலவு செய்வது என்பது பெற்றோருக்கு உள்ள பிரச்சினையாகும் -இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- தங்களது பிள்ளைகளின் கல்வியை உறுதிப்படுத்துவதே யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான மக்களின் நோக்க மாகும். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவதும் ஒரு பிரச்சினை யாகும். இந்தப் பிரதேசத்தில் சேதமடைந்துள்ள சின்னங்களைச் சீரமைப்பது மற்றும் கோவில்களை புனர்நிர்மாணம் செய்தல் முதலான பிரச்சினைகளுக்கு எவ்வாறு பதில் தேடுவது என்பதே பெரும்பாலானோரின் எதிர்பார்ப்பாகும். நீங்கள் இவற்றை எமக்கு மறைக்கவேண்டியதேவையில்லை. எவ்வாறு உண்மையான தீர்வு ஒன்றை வழங்க வேண்டும் என்பதற்காகவே நாம் உங்களுடன் வருகின்றோம். எதிர்காலத்தில் மாதத்துக்கு ஒரு முறை இங்கு வந்து, உங்களிடம் நம்பிக்கையைக் கட்டியெழுப்பி


ஜனாதிபதித் தேர்தலில் கட்சி சார்பற்ற வேட்பாளராக ரணில் விக்கிர மசிங்கவை நிறுத்தி, ஜனாதிபதியாகத் தேர்வுசெய்வதற்காக நாம் இப்போதிருந்தே செயற்படவேண்டுமென்பதை நான் கூறுகின்றேன் - என்றார். (ஒ-20)



# பொலிஸ் தினம் கடைப்பிடிப்பு

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில், 160 ஆவது பொலிஸ் தினம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் சமந்த டீ சில்வா கலந்துகொண்டு, உயிரிழந்த பொலிஸாருக்கு அஞ்சலி செலுத்தினார். (ப-113)

# கிளிநொச்சியில் பயிற்சி



கிளிநொச்சி, மார்ச் 25

கிளிநொச்சியில் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை தொடர்பான ஆய்வு முகாமைத்துவப் பயிற்சி கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகியது.

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் மற்றும் யாழ்.சமூக செயற்பாட்டு நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடத்திய இந்தப் பயிற்சிப் பட்டறையின் வளவாளராக ஏ.அறிவழகன் கலந்துகொண்டார். (ப-13)

# அடையாள அட்டை இன்மையால் உதவி நிதி கிடைப்பதில் தாமதம்

முல்லைத்தீவு மாவட்டத்தில், பொருண்மியம் நலிவுற்றோருக்காக வழங்கப்படுகின்ற நலன்புரிக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டையை வங்கிகள் கோருவதால், பல குடும்பங்கள் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

போர் காரணமாக முல்லைத்தீவில் பல குடும்பங்களின் தேசிய அடையாள அட்டை உட்படப் பல ஆவணங்கள் அழிவடைந்துள்ளன. அதனால் கிராம அலுவலர்கள் மூலம் உறுதிப்படுத்தி, பிரதேச செயலர் ஊடாகக் கொடுப்பனவுகளைப் பெற்றுத் தருவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)

# மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 25

ஊரெழு கணேச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டி, பாடசாலை மைதானத்தில் நாளைமறுதினம் புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.கணேசலிங்கம், கோப்பாய் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

# பொதுக்கூட்டம்

சாவகச்சேரி, மார்ச் 25

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின், தென்மராட்சிப் பிரதேச பிரிவுச் சங்கத்தின் 19 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. தென்மராட்சிப் பிரதேச அலகின் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (ப-9)

# திருத்தச்சட்டங்களுக்கு ஒப்புதல்

'வற்'வரி திருத்தச்சட்டம், சமூக பாதுகாப்பு வரி திருத்தச்சட்டம் ஆகிய இரண்டு திருத்தச்சட்டங்களுக்கும் சபாநாயகர் ஒப்புதல் அளித்துள்ளார். (ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## பறப்பதற்கு முன்......!

வெளிநாட்டு ஆசையால், அதிலும் குறிப்பாக கனடாவுக்குச் சென்றுவிடவேண்டும் என்ற ஆசையால் கோடிக்கணக்கான பணத்தை இடைத்தரகர்களை நம்பிக்கொடுத்து ஏமாந்த, ஏமாறுகின்ற சம்பவங்கள் தமிழர் தாயகத்தில் ஏராளம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொருநாளும் இது தொடர்பான முறைப்பாடுகள் பொலிஸாரிடம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வாராவாரம் அது தொடர்பான செய்திகளையும் எச்சரிக்கைக் குறிப்புகளையும் ஊடகங்களும் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், கனடா மோகம் எம்மவர்களின் மனங்களை விட்டு அகலுவதாக இல்லை. இத்தனைக்கும் கனடா, பாலும் தேனும் பாய்ந்தோடும் பூமியல்ல. இதை தம் உள்ளத்தில் இருத்தி தமது பயணப்பாடுகள் தொடர்பில் தமிழர்கள் சிந்திக்கவேண்டும். பொருளாதாரத் தளம் பலை எதிர்கொண்டுள்ள மேற்குநாடுகளில் இன்று கனடாவும் ஒன்று. இன்னும் சொல்லப்போனால் மேற்கு நாடுகளில் அண்மைக்காலமாகப் பல்துறைப் பிரச்சினைகளில் சிக்கியுள்ள ஒரே நாடாகவும் கனடாவே காணப்படுகின்றது. வேலையில்லாத் திண்டாட்டம், வீடில்லாப் பிரச்சினை, பணவீக்கம் இவை மூன்றும் இன்று கனடாவில் இருக்கும் அளவுக்கு எந்தவொரு மேற்கு நாடுகளிலும் இல்லை. இவை மூன்றையும்தான் தனது பிரதான தேர்தல் பரப்புரைக் கருவியாக கனேடிய எதிர்க் கட்சித் தலைவர் பியர் பொலிவியர் மேற்கொண்டு வருகின்றார். ஆளும் லிபரல் கட்சியும், அதன் தலைவரும், பிரதமருமான ஜஸ்ரின் ட்ரூடோவும் மக்கள் மத்தியில் முன்னெப்போதும் இல்லாதவகையில் இன்று செல்வாக்கிழந்து போனமைக்கு வேலையில்லாப் பிரச்சினையும், வீடற்றவர்களின் போராட்டமும்தான் முதன்மைக் காரணம்.

கனேடியர்கள் மத்தியில் தன் செல்வாக்கை மீண்டும் வலுப்படுத்தி ஆட்சியைத் தக்கவைக்கவேண்டுமாயின், பணவீக்கத்தைக் குறைக்கவேண்டும், வீடற்றவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கவேண்டும் மற்றும் கனேடியர்களுக்குத் தொழில்வாய்புகள் கிடைப்பதை உறுதிப்படுத்தவேண்டும் என்கின்ற நோக்கில், தற்போது தன் செயற்றிட்டங்களை ஆரம்பித்துள்ளது ஆளும் லிபரல் அரசாங்கம். குடியேறிகளின் வருகையைக் கட்டுப்படுத்தினால் பணவீக்கம், வேலைவாய்ப்பு மற்றும் வீடற்றவர்கள் பிரச்சினை ஆகிய மூன்று 'மாங்காய்களையும்' ஒரேகல்லில் வீழ்த்திவிட முடியும். இதை இறுக்கமாக நடைமுறைப்படுத்தும் பொறுப்பு குடிவரவு, குடியகல்வு அமைச்சர் மார்க் மில்லரின் 'இரும்புக் கரங்களிடம்' ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. கனடாவுக்குச் செல்லும் வெளிநாட்டு மாணவர்கள் எண்ணிக்கையையும், குறிப்பிட்ட சில நுழைவிசைவுகளையும் கட்டுப்படுத்துவதில் வெற்றிகண்ட மில்லர், தற்போது தற்காலிக விசாக்கள் மூலம் கனடாவுக்குள் வருவோரையும், அகதிகளாகக் கனடாவுக்குள் வருவோரையும் கட்டுப்படுத்துவதில் தீவிரம் காட்டியிருக்கின்றார். சுகாதாரத்துறையைத் தவிர்த்து வேறு எந்தத்துறையிலும் கனேடியர்களுக்கே வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்பதை அவர் கொள்கையாக அறிவித்திருக்கின்றார். ஆக, கனடாவுக்கு இதுவரை சென்றவர்களே அங்கு வாழமுடியாமல் அமெரிக்காவுக்குள் சட்டவிரோத ரயில் பயணங்கள்மூலம் 'எல்லைபாயும்' சம்பவங்கள் தற்போது அதிகரித்துள்ள நிலையில், கனடா என்பது சொர்க்கபுரி என்ற தோரணையில் ஒவ்வொருநாளும் இங்கிருந்து பலநூறுபேர் அங்கு படையெடுப்பது முட்டாள்தனத்தின் உச்சமே.

சுற்றுலா விசாமூலம் பல்லாயிரக் கணக்கானவர்கள் அண்மைக்காலமாக கனடாவுக்குச் சென்றிருந்த நிலையில், அவ்வாறு சென்றவர்கள் அகதிகளாக அடைக்கலம் கோரினால், அவர்களை 'வலுக்கட்டாயமாக நாடு கடத்தும் திட்டத்தையும்' கனடா தற்போது நடைமுறைப்படுத்திவருகின்றது. நிலைமை இவ்வாறாக இருக்கையில், களநிலைவரங்களையும் உண்மைத்தன்மைகளையும் அறியாது மேற்கொள்ளும் இந்தப் பயணங்கள் எம் எதிர்காலத்தை நாமே கொன்று புதைக்கும் கைங்கரியமே அன்றி வேறில்லை...!






## பொருளாதார மறுசீரமைப்பு இல்லாவிடில் மீள நெருக்கடி

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 25**

**ஏற்றுமதியைவிடவும் இறக்குமதி அதிகமாகக் காணப்படுகின்றது. இந்த இடைவெளியைச் சரி செய்யக் கடன்கள் பெற்றோம். இந்தநிலை தொடர்ந்தால் இன்னும் 10 ஆண்டுகளில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துளளார்.**

விரைவில் நாம் பொருளாதார மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டும். இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்தில் இருந்து ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்துக்குச் செல்ல வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நேற்றுமுன்தினம் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடு எந்த வழியில் செல்ல வேண்டும் என்பதை இளைஞர்கள் தீர்மானிக்கவேண்டும். உங்கள் எதிர்காலத்தை நீங்கள் தீர்மானிக்கவேண்டும். உங்கள் எதிர்காலம் தொடர்பில் நீங்கள் கவனமாக இருக்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-இ)

## ஆணைக்குழு பதவிக்காலம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 25

தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவிடம் இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தை அரசாங்கம் நீடித்துள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரைகளை ஏப்ரல் 15ஆம் திகதிக்கு முன் அளிக்கவேண்டும் என்று முன்பு தெரிவிக்கப்பட்டிருந்தநிலையில், தற்போது இரண்டு மாதங்கள் கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## தொலைத்தொடர்பு வரி 13.8 பில்லியன் இலாபம்

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் தொலைத் தொடர்பு வரி மூலம் ஈட்டப்பட்ட வருமானம் 29.4 வீதத்தால் உயர்ந்து, 13.8 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது என்று நிதியமைச்சகம் வெளியிட்ட நிதி முகாமைத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் தொலைத் தொடர்பு வரி வருவாய் 10.7 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியுள்ளது. மேலும் 2023 முதல் ஆறு மாதங்களில் தொலைபேசி இணைய இணைப்புகள் உட்பட இணைய சந்தாதாரர்களின் எண்ணிக்கை 1.0 சதவீதமாகக் குறைந்து 21.9 மில்லியனாக உள்ளது. (ச-இ)

## தொழிற்சாலை திணைக்களத்தில் வெற்றிடங்கள்

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தில் பெரும் ஊழியர் வெற்றிடம் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றன.

அனுமதி பெற்ற அலுவலக ஊழியர்கள் 769 பேராக உள்ளபோதும், தற்போது 311 பேர் மட்டுமே பணிபுரிகின்றனர் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

## ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் கூடும்

எதிர்வரும் காலங்களில் ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடையும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளி விவரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார். இலங்கைக்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணியின் அளவு கணிசமாக அதிகரிக்கும் எனவும், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியில் இருந்து பெறப்பட்ட கடன்களும் மானியங்களும் ரூபாவின் பெறுமதி வலுவடைவதற்கு மற்றொரு காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

### நாளை

26.03.2024

**செவ்வாய்க்கிழமை**

**பங்குனி–13**

சுபநேரம் : 10.44 -12.14

ராகுகாலம் : 03.14 - 04.44

### நாளொரு நல்வார்த்தை

இலட்சியமில்லாதவன்
இருட்டான பாதையில்
தடுமாறிச் சென்று கொண்டிருப்பான்.
எனவே ஒரு லட்சியத்தை நோக்கி
முன்னேறுங்கள்.

—சுவாமி விவேகானந்தர்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் மறுசீரமைப்புகளில் விரைவில் இணக்கப்பாடு!



## கடன் வழங்கும் குழு தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 25**

**இந்தியா மற்றும் பரிஸ் கிளப் நாடுகளுக்கு இலங்கை செலுத்த வேண்டிய கடன் தொகைக்காக ஆறு வருட கால அவகாசம் வழங்கு வதுடன், கடனை மீளச் செலுத்தும் காலத்தில் வட்டி வீதத்தைக் குறைப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.**

கடன் வழங்கும் தரப்பினருக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையி லான பேச்சுகள் நல்ல நிலையில் உள் ளன என்றும், கடனுக்கான விதிமுறை கள் தொடர்பாக முறையான இணக்கப் பாடுகள் மிக விரைவில் எட்டப்படும் என வும் உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழு தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழு உறுப்பினர்களுக்கு இடையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் பின்னர் சர்வ தேச ஊடகம் ஒன்றுக்கு விடுத்த அறிக்கை யிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு கடன் வழங்கிய 17 நாடு கள் 2023 ஆம் ஆண்டு கடன் மறுசீர மைப்பு பேச்சுகளை எளிதாக்குவதற்காக இந்தக் குழுவை அமைத்தன. இந்தக் குழுவில் இருந்து சீனா விலகியுள்ள போதிலும், அவதானிப்பாளராக விவா தங்களில் பங்கேற்றுள்ளது.

சீனக் கடனை மறுசீரமைப்பது குறித்து இரு நாடுகளின் அரசாங்கங்களும் தொடர்ந்து பேச்சு நடத்துகின்றது என்று குறிப்பிட்டுள்ள உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழு, எதிர்காலத்தில் சீனாவுடன் ஓர் உடன்பாட்டை எட்ட போவதாகவும் தெரிவித்துள்ளது. (எ-இ)

# வெப்பத்தால் ஒருவர் பலி

கொழும்பு, மார்ச் 25

அதிக வெப்பம் காரணமாக முதி யவர் ஒருவர் உயிரிழந்துள் ளார் என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அக்குரஸ்ஸ திகல பகுதியில் கடந்த வெள் ளிக்கிழமை நடந்துள்ளது.

பலவருடங்களாக இதய நோயா ளியாக சிகிச்சைபெற்று வந்த 72 வயதுடைய முதியவரே இவ் வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த நபர் நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக மோட்டார் சைக்கிளில் சென்றபோது அதன் ரயரின் காற்று வெளி யேறியதனால் அவர் வெயி லில் மோட்டார் சைக்கிளை தள் ளிக்கொண்டு சென்றுள்ளார். இதன்போது உஷ்ணம் மற்றும் சோர்வு காரணமாக சுருண்டு விழுந்து அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

உடற்கூற்றுப் பரிசோதனை யில் இருதயத்தின் உயிரணுக் கள் குறைந்தமையே இறப்புக்கு காரணம் என உறுதிப்படுத்தப் பட்டுள்ளது என்று மருத்துவர் கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# மொட்டு கட்சியினருக்கு வாய்ப்பூட்டு

கொழும்பு, மார்ச் 25

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரை கட் சியின் நிறைவேற்றுக்குழு தெரிவுசெய் யும்வரை ஜனாதிபதி வேட்பாளர் தொடர் பாக பொதுவெளியில் கருத்து வெளி யிடவேண்டாம் என மொட்டுக்கட்சி உறுப்பினர்களுக்குக் கட்சித் தலை மைப்பீடம் பணிப்புரை விடுத்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப் பில் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த ரஞ்சித் பண்டார, "ஜனாதிபதி வேட்பாளரை நிறைவேற் றுக்குழுவே தீர்மானிக்கவேண்டும், அதுபற்றிக் கருத்து வெளியிடவேண் டாம் எனக் கட்சித் தலைவர் எமக்கு அறிவித்துள்ளார். எந்தவொரு தேர்த லையும் எதிர்கொள்வதற்கு கட்சி தயார்" என்று குறிப்பிட்டார். (எ-44)

# மரதன் ஓட்டப்போட்டி; புதிய வழிகாட்டல்கள்

கொழும்பு, மார்ச் 25

பாடசாலைகள் மற்றும் பொதுமக்களுக்காக நடத்தப்படும் நீண்டதூர ஓட்டப்போட்டி மற் றும் மரதன் போட்டிகளில் பின்பற்றவேண்டிய வழிகாட்டுதல்கள் குறித்த புதிய சுற்றறிக் கையை விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

மரதன் மற்றும் நீண்டதூர ஓட்டப் போட்டி களில் பங்கேற்கும் அனைத்து விளையாட்டு வீரர்களும் மருத்துவப் பரிசோதனைக்கு உட் படுத்தப்படுவது கட்டாயமாகும். மரதன் ஓட்டப் போட்டிகளில் ஈடுபடும் விளையாட்டு வீரர்கள் பங்கேற்க மருத்துவ அறிக்கை மற்றும் ஈ. சி. ஜி. (ECG) அறிக்கையை மருத்துவரிடம் வழங்க வேண்டும் என்றும் இந்தச் சுற்ற றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)


# பிள்ளையானின் 'ஈஸ்டர் படுகொலை'

கொழும்பு, மார்ச் 25

இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் படுகொலை தொடர்பான புத்தக மொன்றை இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் என அழைக்கப்படும் பிள்ளையான் எழுதி வெளியிட்டுள்ளார்.

'ஈஸ்டர் படுகொலைகள் மத நல்லி ணக்கம் அறிதலும் புரிதலும்' என்ற தலைப்பில் இந்த நூல் வெளியிடப் பட்டுள்ளது.

இதேவேளை சிவநேசதுரை சந்திர காந்தனுடன் நெருங்கிய தொடர்பில் ருந்த முன்னாள் ஜனாதிபதி கோத்தா பய ராஜபக்ச அண்மையில் புத்தக மொன்றை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# இளநீருக்கு மவுசு


யாழ்ப்பாணம், மார்ச் 25

நாளுக்குநாள் அதிகரிக்கும் வெயிலின் தாக்கத்தால் சந் தையில் இளநீர் விலை உயர்ந்துள்ளது.

இளநீர் உற்பத்தி குறைந்து, தேவை அதிகரித்து வருகின் றமை காரணமாகவே இளநீர் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

அதன்படி, 100 முதல் 150 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்ட இளநீர் தற்போது 180 முதல் 250 ரூபா வரை யில் விற்பனை செய்யப்படு கிறது என்று நுகர்வோர் தெரி வித்துள்ளனர். (ச-17)

# செயற்கை நுண்ணறிவால் தயாரிக்கப்பட்ட அறிக்கை



கொழும்பு, மார்ச் 25

கொமர்ஷல் வங்கி தனது 2023ஆம் ஆண்டுக்கான ஆண் டறிக்கையை செயற்கை நுண்ணறிவு உதவியுடன் அறி முகம் செய்துள்ளது. தெற்காசியாவில் செயற்கை நுண்ண றிவுத் தொழில்நுட்பத்தால் ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு வது இதுவே முதற்தடவையாகும்.

ஆண்டறிக்கையில் காணப்படும் விடயங்கள் தொடர்பான விளக்கங்களையும், சந்தேகங்களையும் வாடிக்கையாளர்கள் செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்பட்டுள்ள உதவியாள ரிடம் (இலத்திரனியல் றோபோ) கேட்டுத் தெரிந்துகொள்ள லாம். கொமர்ஷல் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி யும், முகாமைத்துவ இயக்குநருமான சனத் மானதுங்க இது தொடர்பில் தெரிவிக்கையில், 'முதலீடுகள், டிஜிற்றல் பரிமாற் றங்கள், தரவுகள் போன்ற சகல விடயங்களும் ஆண்டறிக்கை யில் உள்ளடக்கப்பட்டிருக்கும். நாங்கள் பதினைந்து வருடங் களுக்கு முன்னரே எமது ஆண்டறிக்கையை இலத்திரனியல் வடிவில் வெளியிட ஆரம்பித்துவிட்டோம்" என்றார்.

கொமர்ஷல் வங்கியின் ஆண்டறிக்கையைத் தயாரிக்கும் நிறு வனமான ஸ்மார்ட் மீடியா இயக்குநர் விஜித் கன்னங்கர தெரி விக்கையில்; "கொமர்ஷல் வங்கிக்கும் எமக்குமான முப்பது வருடகால உறவின் அடிப்படையில் வாடிக்கையாளர் நல னுக்கு முக்கியத்துவமளிக்கும் செயற்பாடுகளில் இது முன் னேற்றகரமான விடயம்" என்று குறிப்பிட்டார். (ம-6)

## மீனவர் கைதைக் கண்டித்து

# இராமேஸ்வரத்தில் வேலைநிறுத்தம்!

கொழும்பு, மார்ச் 25

இலங்கைக் கடற்படையைக் கண்டித்து தமிழ்நாடு, இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கை சிறையில் உள்ள மீனவர் களை விடுவிக்கக்கோரியும் படகு களை மீட்கக் கோரியுமே அவர்கள் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

மீனவர்கள் வேலைநிறுத்தம் காரண மாக 800க்கும் மேற்பட்ட விசைப்படகு கள் கரையில் நிறுத்தப்பட்டுள்ளன.

தமிழக ஒன்றிய அரசு விரைந்து நட வடிக்கை எடுக்காவிடில் தேர்தலைப் புறக் கணிக்கப்போவதாகவும் மீனவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (எ-இ)

# அபாய நிலையில் 150 கட்டடங்கள்

கொழும்பு, மார்ச் 25

கொழும்பில் சுமார் 150 அபாயகரமான கட்டடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்த்தன தெரி வித்துள்ளார். அவற்றை அகற்றுமாறு உரிய உரிமை யாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி வேட்பாளர்கள்

# இனப்பிரச்சினைக்குத் தீர்வை முன்வைத்தாலே பரிசீலனை

சிறீதரன் தெரிவிப்பு

**கிளிநொச்சி, மார்ச் 25**

**ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களாக நிற்பவர்கள் எவராக இருந்தாலும், அவர்கள் இனப்பிரச்சினைக்குத் தீர்வுத்திட்டத்தை முன்வைத்தாலேயே யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் பரிசீலிப்போம் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2009க்கு முன்னர் ஆயுதப் போராட்டம் நடந்தபோது ஒரு பெருந்தலைவனுக்கு கீழ் மிகப்பெரும் விடுதலைப் போரிலே ஒவ்வொரு பெண்ணினதும் தனித்துவமான ஆளுமை எல்லாத் துறைகளிலும் சமமாக இருந்தது. இதை வரலாறு நிரூபிக்கின்றது. இப்போது ஜனாதிபதித் தேர்தல் பற்றியும் பேசப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற ஒரு வேட்பாளர் இந்த மண்டபத்தில்கூட ஒரு கூட்டத்தை நடத்திச் சென்றுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இனப்பிரச்சினைக்குத் தமது தீர்வுத்திட்டம் என்ன என்பதை வெளிப்படுத்தினால் நாங்கள் அவரை ஆதரிப்பதா இல்லையா என்பது தொடர்பில் அடுத்தகட்டப் பரிசீலனைகளில் ஈடுபடுவோம். தமிழர்கள் பொதுவேட்பாளர் பற்றிய சிந்தனையையும் கொண்டுள்ளனர். தமிழ் மக்களின் அரசியல் தீர்வை எட்டுவதற்காக தமிழ் வாக்காளர்கள் ஒன்று திரண்டு தமிழ் பொது வேட்பாளரை தீர்மானிக்க முனைந்தால் தென்பகுதியில் இருந்து எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் வெல்ல முடியாத நிலை ஏற்படும். அது தொடர்பில்கூட தமிழர் தரப்பு மிக நுணுக்கமாக ஆராய்கின்றது - என்றார். (அ-ம-113-26)

## காணித் திட்டமிடல் கூட்டம்; பல விடயங்கள் ஆராய்வு

முல்லைத்தீவு மாவட்டத்தின் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் குழுக் கூட்டம் மாவட்டச் செயலரும் மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் குழுவின் தலைவருமான அ.உமாமகேஸ்வரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

பிரதேச மட்ட காணி பயன்பாட்டு குழுக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் மாவட்ட பயன்பாட்டுக் குழு முன்னிலையில் முன்வைக்கப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

இதன்போது இற்றைப்படுத்தப்பட்ட பிரதேச காணி பயன்பாட்டுத் திட்டங்களை உள்ளடக்கிய புத்தகங்களை பிரதேச செயலாளர்களுக்கு கையளித்ததுடன் இலங்கை காணி பயன்பாட்டுத் திட்டமிடல் கைநூல் 2023 மற்றும் பங்கேற்பு காணி பயன்பாட்டுத் திட்டமிடல் வழிகாட்டுதல்கள் 2021 முதலானவற்றை பிரதேச மட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இதன்போது நீண்டகால குத்தகையில் வர்த்தக நிலையங்கள் அமைந்த காணித்துண்டுகள், புதிய அரச வனப் பகுதியில் அமைந்த காணித் துண்டுகளை நீண்டகால குத்தகையில் வழங்குதல், திணைக்களங்களுக்குக் காணி கையளித்தல், பொதுத் தேவைக்குப் பயன்படுத்தப்படும் காணிகளை கையளித்தல், நீண்டகால குத்தகையில் காணி வழங்குதல் தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. (ஒ-13)




## சர்வதேச நீர் தினம்

கோண்டாவில், மார்ச் 25

சர்வதேச நீர் தின நிகழ்வுகள், இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.


பாடசாலை முதல்வர் திலீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக நீர்ப்பாசனத்துறைப் பொறியியலாளர் எந்திரி எஸ். சர்வராஜா, கௌரவ விருந்தினர்களாக எந்திரி அ.சுந்தரேசன், இயற்கை ஆர்வலர்களான சசிகரன், அருந்தவம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ப-100)



சர்வதேச காடுகள் தின நிகழ்வுகள், 'காடுகள் மற்றும் புதுமை' என்னும் கருப்பொருளில் யாழ். அரசடி சித்தி விநாயகர் முன்பள்ளியில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றன. நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ம.சசிகரன் கலந்து கொண்டார். (ப-159)



கடந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு, இந்துபுரம் சனசமூக நிலையம், இளந்துளிர் விளையாட்டுக் கழகம் மற்றும் பீனிக்ஸ் இளைஞர் கழகம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த மதிப்பளிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ப-13)



புதுக்குடியிருப்பில் தேசிய வன தினத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்பு வனவள திணைக்களத்தினரால் மர நடுகை செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ப-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
27
.
04
.
1936



மறைவு
06
.
04
.
2023

## அமரர் சிவசம்பு திருநாவுக்கரசு

**(பலகாடு காரைநகர்)**

ஓராண்டு காலம் ஓடம் கனமாக ஒரு யுகமாக மிதப்பதேன்??
ஒருநாள் காண் முகத்தின் முகவரி மனதில் நிலைக்கும் போது..
பலதச காலம் பூமித்தாயோடு வாழ்ந்த உம் பிரிவால்
மீளாதுயில் கொண்டு கண்ணீர் உவந்து ஆறாதுயர் கொண்டோம்
ஓராண்டாய் இன்னல்தனை உம் இளநகை வென்ற
தடங்கள் உரைக்கிறது உம் நினைவுகள்
விழியோர ஈரம் நெஞ்சத்து பாரம் ஓராண்டு காலம்
நிழற்படமானாலும் எம் தெய்வமாய் உம் ஆசி எம் நிழலாய் தொடர
நீங்கா நினைவுடன்...

**"சண்முக வாசம்"**
**229, பருத்தித்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்**

(CR/41965) J-1

# வெளிநாட்டுப் பல்கலைக்கல்வி: மாணவர்களுக்குக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 25

வடக்கு மற்றும் கிழக்கு மாணவர்களை கனடா, பிரிட்டன், ஜேர்மனி ஆகிய பல்கலைக்கழகங்களின் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிப்பது தொடர்பான கருத்தரங்கு 'ஜெட்விங்' தனியார் விடுதியில் எதிர் வரும் 30 மற்றும் 31ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கின்போது தகைமையுடைய மாணவர்களுக்கு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கான அனுமதிக்கடிதங்களை 30 தொடக்கம் 40 நிமிடங்களில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சர்வதேச வெளிநாட்டு கற்கைகள் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி சதுரிகா திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரிட்டனின் யோர்க் சென்.ஜோன்ஸ் பல்கலைக்கழக இலங்கைக்கான முகாமையாளர் திருமதி பாக்கிய பெரேராவும் இருநாள் அமர்வுகளிலும் கலந்து கொள்ளவுள்ளார். பொருளாதாரரீதியாக சிக்கல் களை எதிர்கொள்ளும் மாணவர்கள் கனடாவில் பட்ட மேற்படிப்பைத் தொடர விரும்பினால் அதற்கான கடன் வசதியும் இதன்போது செய்து கொடுக்கப்படும். இதற்கு பிணைகள் எதுவும் தேவையில்லை. முற்று முழுதாகக் கல்வி மேம்பாட்டை அடிப்படையாக வைத்தே கடன் வழங்கப்படும். ஜேர்மனியில் பட்டப் படிப்பை மேற்கொள்ள விரும்பும் மாணவர்கள் முதல்கட்ட தவணைப் பணமாக 3 ஆயிரம் யூரோ செலுத்த வேண்டும். மிகுதிப்பணத்தை தவணைகளில் செலுத்தலாம். ஜேர்மன் அரசாங்கம் பல்வேறு புலமைப் பரிசில்களையும் வழங்குகிறது - என்றார். (ம-6)


## வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி
## கூறுவிலை கோரல்

வலி கிழக்கு தென்பகுதி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் உரும்பிராய் கிராமிய வங்கி திருத்தம் செய்வதற்கான கூலி. மூலப் பொருட்களிற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலைப் படிவங்களை சங்க தலைமையகத்தில் பெற்று பூரணப்படுத்தி **பொது முகாமையாளர், வலி கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி.** என்ற முகவரிக்கு தபால் மூலமோ அன்றேல் நேரிலோ அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி : 10.04.2024 மதியம் 12.30 மணி வரை
விண்ணப்பபடிவ கட்டணம் : ரூபா. 500.00
மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் : ரூபா. 10000.00

**நீர்வேலி,**
**22.03.2024**

**பொது முகாமையாளர்**


# மரண அறிவித்தல்

தோற்றம்
05
.
08
.
1957



மறைவு
23
.
03
.
2024

## சாந்தி கருணானந்தன்

கொழும்பைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சாந்தி கருணானந்தன் நேற்றுமுன்தினம் (23.03.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற லிகோரி பெர்னாண்டோ மற்றும் மேரி மார்கரெட் பெர்னாண்டோ தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், கருணானந்தன் (Proprietor, Sharp Graphics Pvt Ltd) அவர்களின் அன்பு மனைவியும், இந்துஷா, தனுஷா, அபிலாஷா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜோசப் ஹரியாராம் அவர்களின் அன்பு மாமியாரும், தியான்ஷான் அவர்களின் பாசமிகு பேர்த்தியும், வசந்தி, ஜெயந்தி, சுகந்தி, செல்வந்தி, டெலி, லென்ஸ்லி, மெர்ஸ்லி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சற்குணராஜன் மற்றும் பத்மலோஜினி, லீலா, ஸ்ரீரமணானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதி அஞ்சலி இன்று (25.03.2024) திங்கட்கிழமை 53A, 5th Lane, St. Benedict's, Mawatha, Colombo - 13 என்னும் முகவரியில் இடம்பெற்று 4.00 மணியளவில் பொரளை பொது மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS54571) N-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
19
.
11
.
1946



மறைவு
21
.
03
.
2024

## திருவிளங்கம் சண்முகலிங்கம்

சரவணை மேற்கை பிறப்பிடமாகவும், டச்சு வீதி, மானிப்பாயை வசிப்பிட மாகவும் கொண்ட திருவிளங்கம் சண்முகலிங்கம் கடந்த (21.03.2024) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருவிளங்கம் - பகவதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், உதயசங்கர் (பிரான்ஸ்), விமலதாசன் (கனடா), கோகிலவாணி, ஜெயசங்கர் (கனடா), பாலதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான ஜெயலட்சுமி (மணி), கனகலிங்கம் (தயா) மற்றும் சொர்ணலிங்கம் (செல்வா- பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகௌரி (பிரான்ஸ்), றஜிதா (கனடா), முகுந்தன், கஜிதா (கனடா), கோசலா ஆகியோரின் அன்பு மாமனாரும், பகீஸ்காந், லக்ஷா, தனுஷா (பிரான்ஸ்), றஜீஸ், விஹானா (கனடா), யதுஷிகா, ஜதுர்சன், அஜீஸ், அக்சரன் (கனடா), ஸபர்ணா, பவிந் (மானிப்பாய்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2024) திங்கட்கிழமை டச்சு வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**டச்சு வீதி,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**தொடர்புகளுக்கு: 077 224 78-**

(CS54309) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் 'அவளுடைய பலம் நாட்டுக்கு முன்னேற்றம்' எனும் தொனிப்பொருளிலான மகளிர்தின நிகழ்வு, சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ப-66)

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் தி.சுந்தரலிங்கத்தின் 40 வருட கூட்டுறவுச்சேவையைப் பாராட்டி முன்னெடுக்கப்பட்ட சேவை நயப்பு விழா சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில்கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் மற்றும் கூட்டுறவாளர்கள்எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-17)



உலக பூச்சிய கழிவு தினத்தை முன்னிட்டு, காரைநகர்ப் பிரதேசசபையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட கடற்கரையோரச் சுத்தப்படுத்தல் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு காரைநகர் கசூரினாக் கடற்கரையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் கசூரினாக் கடற்கரை தொடக்கம் தீர்த்தக்கரை வரையான பகுதிகளில் பிளாஸ்ரிக் முதலான பெருமளவு கழிவுகள் சேகரிக்கப்பட்டு திண்மக்கழிவு தரம் பிரிக்கும் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன. (ப-66)





சர்வதேச நீர் தினத்தை முன்னிட்டு, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் குருதிக்கொடை முகாம் ஒன்று கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ப-214)




யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை கல்லூரியில் கூட்டுறவு உயர்தரப் பரீட்சையை முடித்து வெளியேறிய மாணவர்களுக்கான பிரியாவிடை மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன், கூட்டுறவுச் சபைத் தலைவர் மகாதேவன் மற்றும் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதிஸ்குமரன் எனப்பலர் கலந்துகொண்டனர். (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்புரவாக்கப்பட்டன

அளவெட்டி, மார்ச் 25

அளவெட்டி தெற்கு விவசாய சம்மேளனப் பகுதியின், சுன்னாகம் மாகியப்பிட்டிப் பிரதான வீதிக்கு அருகே அமைந்துள்ள உதிரிக்கை குளத்தின் கரையில், வீதியோரமாக குப்பைகள், விலங்குகளின் கழிவுகள் மற்றும் உணவுக் கழிவுகள் என்பன கொட்டப்படுகின்றன. அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை சமூக சிந்தனையுள்ள இளைஞர்கள் துப்புரவு செய்துள்ளனர். (ப-36)

# மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் எண்ணெய்க்காப்பு நிகழ்வும் கும்பாபிஷேகமும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளன. (ப)

# பிரிட்டன் இளவரசி மிடில்டனுக்கு புற்றுநோய்!

பிரிட்டனின் இளவரசி கேட் மிடில்டன் புற்றுநோய் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் அறுவைச்சிகிச்சை ஒன்றுக்காக இளவரசி கேட் மிடில்டன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும், இளவரசியின் நோய் நிலை தொடர்பிலும் அவருக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் தொடர்பிலும் எவ்வித உறுதிப்பாடான தகவல்களும் வெளியாகவில்லை. பொது வெளியில் தோன்றுவதையும் இளவரசி தவிர்த்து வந்த நிலையில், இது தொடர்பாக ஊடகங்கள் தீவிரமாகின. இந்த நிலையில், நேற்று வீடியோ ஒன்றில் தோன்றிய இளவரசி கேட் மிடில்டன், தனக்குப் புற்றுநோய் தொற்றியிருப்பதாக உறுதிப்படுத்தினார். பிரிட்டன் மன்னர் சாள்ஸுக்குப் புற்றுநோய் தொற்றியிருப்பது ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், இளவரசியும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளமை அரச குடும்பத்தையும் பிரிட்டன் அரச குடும்பத்தின் மீது அன்பு கொண்டோரையும் கவலையடையச் செய்துள்ளது. (ம)


## மரண அறிவித்தல்

தோற்றம் • 28 • 06 • 1948



மறைவு • 23 • 03 • 2024

### பெபெச்சுவா மாறி அன்ரன் கிறிஸ்டியன்

இல.160, எக்கித்தலேன், வத்தளையைப் பிறப்பிடமாகவும், இல.16, கதீற்றல் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பெபெச்சுவா மாறி அன்ரன் கிறிஸ்டியன் அவர்கள் கடந்த (23.03.2024) சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் அன்ரன் B.L.இன்பராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ரெறி மனோ தைரியர் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அலெக்சாண்டர் - ரோஸ் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற Ruted Jamith, Joy Boy (Canada), Anno (Colombo) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.03.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் பெரிய கோவிலில் நடைபெற்று, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 41968) S-1

## மரண அறிவித்தல்

மலர்வு • 22 • 06 • 1940



உதிர்வு • 23 • 03 • 2024

### சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன் அவர்கள் கடந்த (23.03.2024) சனிக்கிழமை அன்று கைதடியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும், காந்திமதியின் அன்புக் கணவரும், சபேசன், ஆனந்தி, தினேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரதீபன், அனுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், அஷ்வின், அக்ஷயா, சந்தோஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், கந்தசாமி, காலஞ்சென்ற கைலைநாதன், சகுந்தலாதேவி, காலஞ்சென்ற யோகராணி, ஜெகதாசன், ஜெயபாலன், காண்டீபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காந்திதாசன், சத்தியமூர்த்தி, சந்திரகாந்தன், இந்துமதி, இந்துசேகரன், பானுமதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது பூதவுடல் செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணி தொடக்கம் புதன்கிழமை மாலை வரை அஞ்சலிக்காக குவாரி வீதி, கைதடி தெற்கில் அமைந்துள்ள இல்லத்தில் வைக்கப்பட்டு, எதிர்வரும் (28.03.2024) வியாழக்கிழமை காலை 08.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு, முற்பகல் 09.30 மணியளவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மைத்துனர் - 077 714 5838
மகன் - 077 740 7847

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 283431) S-1

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 21 • 03 • 1955



மறைவு 24 • 02 • 2024

கடந்த (24.02.2024) சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் சேனாதிராசா இராஜரட்ணம்

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (25.03.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

மாரியம்மன் ஒழுங்கை,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### சுந்தரம் சிவபாக்கியம்

யாழ்ப்பாணம், சாவகச்சேரி கிராம்புவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் சிவபாக்கியம் அவர்கள் நேற்று (24.03.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், சிவஞானசுந்தரம் (றெயின்போ டிஜிற்றல் விஷன்), அமிர்தானந்தசிவம் (லண்டன்), அமிர்தலதா, முருகானந்தம் (UK), அமிர்தநாயகி (பிரான்ஸ்), சதானந்தம் (கலைமகள் டிஜிற்றல் விஷன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மிருதுபாசினி, வனிதா (UK), அமரர் பரராஜசேகரம், விமலசசி (UK), தர்சினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிரோஷன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பவித்திரா (மாணவி, பேராதனைப் பல்கலைக்கழகம்), நிவேதனன் (மாணவன், BCAS Campus), கஜானி (பிரான்ஸ்), கஜானன், கஜான், சஜிந் (லண்டன்), சன்ஜித் (லண்டன்), யதுர்சன் (பிரான்ஸ்), நிதுர்ஷா (பிரான்ஸ்), யனுஷா (பிரான்ஸ்), டிஷாந் (UK), அஸ்வினி (UK), பிரிதா, சர்ஜனா, சுஜித்தா, முகுந்தன் (பிரான்ஸ்), நிதர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், ஆதிக்ஷாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.03.2024) செவ்வாய்க்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CR 41962) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கத்தோலிக்க மக்கள் கடைப்பிடிக்கும் தவக்காலத்தின் பிரதான வழிபாடுகளில் ஒன்றாகக் காணப்படும் குருத்தோலைஞாயிறு வழிபாடு தமிழர் தாயகத்திலும் இலங்கையிலும் உள்ள பல கத்தோலிக்க ஆலயங்களிலும் நேற்று பக்திபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது. (ம-60-27)

## கொள்ளை...

பொலிஸ் திணைக்களத்திடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகப் பெறப்பட்ட தகவலிலேயே இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் கடந்த ஆண்டு 267 கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றின் ஊடாக ஆயிரத்து 12 கோடியே 87 இலட்சத்து 74 ஆயிரத்து 340 ரூபா பெறுமதியான பணம், நகை மற்றும் பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. சந்தேகத்தில் 360 பேர் கைதாகியுள்ளனர்.

ஆயிரத்து 108 திருட்டுச் சம்பவங்கள் ஊடாக 42 கோடியே 86 இலட்சத்து 53 ஆயிரத்து 692 ரூபா பெறுமதியான பணம், நகை மற்றும் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தில் 935 பேர் கைதாகியுள்ளனர். (அ-ஒ-5)

| பொலிஸ் பிராந்தியம் | கொள்ளை | கைதான சந்தேகநபர்கள் | பெறுமதி | களவு | கைதான சந்தேகநபர்கள் | பெறுமதி |
|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 76 | 113 | 26,356,500.00 | 244 | 156 | 134,045,854.00 |
| காங்கேசன்துறை | 33 | 42 | 17,242,000.00 | 90 | 139 | 84,254,256.00 |
| மன்னார் | 06 | 05 | 3,044,000.00 | 99 | 87 | 55,322,809.00 |
| வவுனியா | 72 | 124 | 32,948,590.00 | 360 | 291 | 86,447,322.00 |
| முல்லைத்தீவு | 21 | 17 | 26,615,200.00 | 80 | 74 | 17,208,672.00 |
| கிளிநொச்சி | 59 | 59 | 10,022,568,050.00 | 235 | 188 | 51,374,779.00 |

## சுயாட்சியை...

முன்னெடுப்பது என்றும் இந்த இலக்கை அடைவதற்கான நிரந்தர பொறிமுறையை உருவாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து, அந்தப் பொறிமுறையை இந்தியாவினுடைய மேற்பார்வையிலும் சர்வதேச நாடுகளின் பங்களிப்போடும் ஐ.நா.வின் வழிநடத்தலோடும் புலம்பெயர் உறவுகளின் ஒருங்கிணைப்போடும் உருவாக்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என்றும் ரெலோவின் தேசிய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) 11 ஆவது தேசிய மாநாடு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. அந்த இயக்கத்தின் மாநாட்டுப்பிரகடனத்தை நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம் வாசித்தார்.

பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

எமது தாயகப் பிரதேசத்தை எமது பாரம்பரிய வதிவிடமாகவும், எமது தனித்துவமான இன அடையாளத்தையும், தமிழ் மொழிக்கான அங்கீகாரத்தையும் உறுதிப்படுத்திய இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை அரசமைப்பில் திருத்தங்களோடு உருவாக்கப்பட்ட மாகாணசபை ஆட்சி முறைமையை முற்று முழுதாக நடைமுறைப்படுத்த அரசுக்குத் தொடர் அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான நடவடிக்கைகளைச் செயற்படுத்தல்.

எமது இனத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலை உட்பட மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் மற்றும் மனிதத்துக்கு எதிரான குற்றங்களால் பாதிக்கப்பட்ட நீதி கோரி நிற்கும் எமது உறவுகளுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்க சர்வதேச நீதிப் பொறிமுறைக்காகத் தொடர்ந்தும் பாடுபடுவோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கான நீதியைக் கோரி நிற்கும் எம் மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்வது. அரச இயந்திரங்களால் எமது தாயகப் பிரதேசத்தில் தொடர்ந்து அபகரிக்கப்பட்டு வந்த காணிகளை விடுவிப்பதற்கும், தொடர்ச்சியாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் காணி அபகரிப்பின் விளைவாக எமது வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்படுவதாலும், பௌத்த சின்னங்களை நிறுவுவதன் ஊடாகவும் நமது மக்களின் வாழ்வாதாரத்தையும் இனக்குடிப் பரம்பலையும் சிதைத்து நமது சுயநிர்ணய உரிமைக்கான தகுதியைக் கேள்விக்குறி ஆக்க முயலும் செயற்பாடுகளுக்கு எதிரான சகல அரசியல் நடவடிக்கைகளையும் மேற்கொள்வது.

எமது இனக் குடிப்பரம்பலின் செறிவைப் பேண எமது எதிர்காலச் சந்ததிக்கான வளமான வாழ்வை உறுதிப்படுத்தி அதனூடாக எமது இனத்தின் இருப்பை தக்கவைக்க, எமது தாயக பூமியில் பொருளாதார அபிவிருத்தியை உறுதிசெய்யும் தற்சார்பு பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்கி அதை செயல்படுத்த உரிய வேலைத்திட்டங்களை மேற்கொள்வது.

எமது இனத்தின் கல்வி, கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களை பாதுகாப்பதோடு அவற்றை வளர்ப்பதற்கும் செழுமைப்படுத்தவும் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதுடன் நமது மக்கள் நலன் சார்ந்து பிராந்திய அரசியல் உறவை வலுப்படுத்தவும், சர்வதேச நாடுகளின் ஆதரவைத் திரட்டவும் அதற்கான பூகோள அரசியல் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பது.

ஆகிய மேற்சொன்ன எமது மக்களின் நலன் சார்ந்த அரசியல் அபிலாஷைகளையும் உரிமையையும் வென்றெடுப்பதற்கு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் உட்பட எமது தேசியத்தை நேசிக்கும் அனைத்து தமிழ் தரப்பினரையும் ஒன்றிணைத்து புலம்பெயர் உறவுகளையும் ஒருங்கு சேர்த்து ஒரு தேசமாக எமது இனத்தைக் கட்டி எழுப்பும் பணியில் முழு முயற்சியோடு ஈடுபடுவோம் என்றும், பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-110)

## விபத்தில்....

வீதியால் நடந்து வந்தவரை மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்தவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

புங்குடுதீவைச் சேர்ந்த ஜோசன் கஜேந்திரன் (வயது - 46) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி ஆலயத் திருவிழாவுக்குச் சென்றுவிட்டு வீதியால் நடந்துவரும் போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதியுள்ளது. காயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் சாரதி தலைக்கவசம் அணியவில்லை என்பதுடன் அவரிடம் சாரதி அனுமதிப் பத்திரமும் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இறப்பு விசாரணைகளைத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

## ஊடகவியலாளர்...

ரூபா பணத்தைப் பெற்றுள்ளார். அத்துடன் வவுனியாவைச் சேர்ந்த மேற்படி நபர் அங்கு இயங்கும் உள்ளூர் ஊடகம் ஒன்றின் பெயரில் அடையாள அட்டையையும் வழங்கிவிட்டு தொடர்பைத் துண்டித்துள்ளார்.

இதனையடுத்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர், யாழ். மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார். அந்தப்பிரிவின் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினர் வவுனியாவுக்குச் சென்ற நிலையில் சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார். கடை ஒன்றுக்குள், வெளியில் பூட்டிவிட்டு சி.சி.ரி.வி. ஊடாக அங்கு வருவோரை அவதானித்தபடி பதுங்கி இருந்த சந்தேகநபரைப் பொலிஸார் 'பொறிவைத்துக்' கைது செய்தனர். சந்தேகநபருக்கு எதிராக மேலும் பல மோசடி வழக்குகள் உள்ளதாகவும் பொலிஸார் கூறுகின்றனர். (அ-ஒ-26)

## பால்மா...

கிலோக்கிராம் பால்மாவின் விலை 150 ரூபாவாலும், 400 கிராம் பால்மாவின் விலை 60 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## தேங்காய்...

ஒவ்வொரு மாதமும் அறுவடை செய்கின்ற தேங்காயில் சிறு பங்கு மாத்திரமே தற்பொழுது அறுவடை செய்யப்பட்டு வரு வதாகவும் இனி வரும் மாதங்களில் முற்றாகத் தேங்காய் இல்லாத நிலை காணப்படும் எனவும் தென்னை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சில மாவட்டங்களில் தென்னை மரங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளை ஈ தாக்கமே தட்டுப்பாட்டுக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஜராத்திடம் மண்டியிட்டது மும்பை இந்தியன்ஸ் அணி




இறுதி வரை போராடியும் மும்பை இந்தியன்ஸ் அணியால் குஜராத் அணியை வீழ்த்த முடியவில்லை.

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மும்பை அணியை குஜராத் அணி தனது சொந்த மைதானத்தில் எதிர்கொண்டது.

குஜராத் அணியின் தலைவராக கடந்த தொடரில் செயற்பட்ட ஹார்திக் பாண்டியா மும்பை அணிக்குத் தலைமை தாங்கினார். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவர் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

முதலில் ஆடிய குஜராத் அணி ஆரம்பத்திலேயே அதிரடியாக ஆடத் தொடங்கியது. காயத்திலிருந்து மீண்டு அணியில் இணைந்துள்ள பும்ராவின் பந்து வீச்சு ஆரம்பமானதும் குஜராத்தின் ஓட்டவேகம் கட்டுப்படுத்தப்பட்டது. அந்த அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் சாய் சுதர்சன் 39 பந்துகளில் 45 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் பும்ரா 14 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலளித்து ஆடிய மும்பை அணி முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே இசான் கிஷானின் இலக்கைப் பறிகொடுத்தது. ரோஹித் சர்மா, பீரிவிஸ் இணை அணியை மீட்க முயன்றது. ரோஹித் 29 பந்துகளில் 43 ஓட்டங்களுடனும், பீரிவிஸ் 38 பந்துகளில் 46 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இறுதி இரண்டு பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மும்பை இழந்தது. இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் வெற்றிக்கு 19 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் அணித் தலைவர் பாண்டியா முதலாவது பந்தில் 6 ஓட்டங்களையும், அடுத்த பந்தில் 4 ஓட்டங்களையும் விளாசி ஆட்டத்தை கைவசம் எடுக்க முயன்றார். இருப்பினும் அடுத்த பந்தில் அவர் ஆட்டமிழக்க மும்பையின் தோல்வி உறுதியானது. இறுதியில் 9 இலக்குகளை இழந்து 162 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. ஆட்டநாயகனாக சாய் சுதர்சன் தெரிவானார்.

(ஒ-5)

**விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்**

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்.

**074 173 7684**

(CS 28175) S-1

# ராஜஸ்தான் ரோயல்ஸ் 20 ஓட்டங்களால் வெற்றி



லக்னோ சுப்பர் ஜெய்ன்ஸ் அணியை வீழ்த்தி ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

ஐ.பி.எல். தொடரின் 4ஆவது ஆட்டம் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கும், லக்னோ சுப்பர் ஜெய்ன்ஸ் அணிக்கும் இடையில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்த அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அணித் தலைவர் சஞ்சு சாம்ஸன் ஆட்டமிழக்காமல் 52 பந்துகளில் 82 ஓட்டங்களை விளாசினார்.

பந்து வீச்சில் நவீன் உல்ஹக் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலளித்து ஆடிய லக்னோ அணி ஆரம்பத்தில் தடுமாறியது. ஒரு கட்டத்தில் அணித் தலைவர் ராகுல் மற்றும் பூரான் இருவரும் இணைந்து வெற்றியை நோக்கி அணியை நகர்த்தினர். இருப்பினும் ராஜஸ்தானின் வியூகங்களால் அது தவிடுபொடியாக 6 இலக்குகளை இழந்து 173 ஓட்டங்களை மாத்திரம் அந்த அணியால் பெற்றுக் கொள்ள முடிந்தது. பூரன் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 41 பந்துகளில் 64 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் ராஜஸ்தான் சார்பில் ட்ரென்ட் போல்ட் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக ராஜஸ்தான் அணித் தலைவர் சஞ்சு சாம்ஸன் தெரிவானார்.

(ஒ-5)

## மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 10 . 1944



மறைவு
23 . 03 . 2024

**வேலுப்பிள்ளை கந்தையா சண்முகலிங்கம் (V.K.Shan)**

(ஓய்வு பெற்ற புகையிரதத்திணைக்கள உத்தியோகஸ்தர், முன்னாள் யாழ் மாவட்ட துடுப்பாட்டப் பயிற்றுனர் (ஸ்ரீலங்கா கிறிக்கட்), முன்னாள் வருகை விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு)

அரியாலை மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகலிங்கம் (இரும்பன்) அவர்கள் கடந்த (23.03.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான கந்தையா - இரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், அமரர் லலிதா (ஓய்வு பெற்ற உப அதிபர், யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு கணவரும், அமரர்களான பொன்னுத்துரை - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், அகிலன் (A/L 1991, புனித பத்திரிசியார் கல்லூரி), விமலன் (A/L 1996, புனித பரியோவான் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிறோஜனாவின் அன்பு மாமனாரும், பிரணீஷ், நித்தீஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.03.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணியவில் இல. 125, திருமகள் வீதி, அரியாலையிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

125,
திருமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
மருமகன் கு.பிரதீபன்
077 338 9480

தகவல்:
குடும்பத்தினர்

(CS 28344) S-1

செய்தி : 021 463 0000 - விளம்பரம் : 021-463 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org